## அன்பான பெற்றோரே

நீங்கள் 5 தொடக்கம் 16 வயதுக்கு இடைப்பட்ட பிள்ளைகளின் பெற்றோர்கள். உங்களை நாங்கள் சந்தர்ப்பம் கிடைக்கும்போது ஒருமுறை நேரில் சந்தித்துக் கொள்வது சிறந்ததெனக் கருதுகின்றோம்.

ஒவ்வொரு வருடமும் ஏறத்தாழ 2000 பிள்ளைகள் மற்றும் இளையோர்கள் எம்மிடம் விளக்கங்கள் மற்றும் ஆலோசனைகளைப் பெறுவதற்காக வந்து செல்கின்றார்கள்.

எமது கடமை என்னவென்றால், இதன்போது உங்கள் பிள்ளை சிறந்த கல்வி வளர்ச்சியைப் பெறுவதற்கு எம்மால் இயன்ற உதவிகளை வழங்குவதாகும்.

உங்களுடன் ஒன்று சேர்ந்து, பாடசாலை மற்றும் வளர்ப்புப் பற்றிய உங்கள் கேள்விகள் குறித்து கலந்துரையாடுவதுடன் உங்களுக்கு ஆலோசனை வழங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம்.

## Graubünden ல் பாடசாலைக் கட்டமைப்பு

5-7 வயதுப் பிள்ளைகளுக்கு 2 வருடப் பாலர் பாடசாலை.
6 வருடங்கள் பிறிமார் பாடசாலை (6.ம் வகுப்பிற்குப் பின்னர் கிம்நாசியத்திற்கு உயர்ந்து செல்வதற்கான பரீட்சையில் பங்கேற்க முடியும்)
3 வருடங்கள் உயர்தரம் றியால்- அல்லது செக்குண்டார் வகுப்பில் (இதன் முடிவில் ஒரு தொழிற்கல்வியை ஆரம்பிக்கலாம் அல்லது 2வது அல்லது 3வது செக்குண்டார் வகுப்பின் பின்னர் தகுதிப் பரீட்சையில் சித்திபெற்று கிம்நாசியம் செல்லலாம்.
சுவிசில் இந்த 11 பாடசாலை வருடங்களிலும், உதவி தேவைப்படும் பிள்ளைகளுக்கு, பாடசாலைகள் மேலதிக கற்கைநெறிகளை வழங்குகின்றன. அத்துடன் இந்த உதவிக்கான செலவை, நகரம் மற்றும் மாநிலம் பொறுப்பேற்கின்றன. இதற்காக அதிக வேளைகளில் எம்மிடமிருந்து ஒரு உறுதிப்படுத்தல் தேவைப்படும்.




## பாடசாலை உளவளச் சேவை வழங்கும் வசதிகள்

பாலர் வகுப்பில் அல்லது பாடசாலையில் உங்கள் பிள்ளையின் வளர்ச்சியில் அல்லது கற்பதில் பிரச்சினைகள் ஏற்படுமாயின், நாங்கள் உங்களுடனும் பாடசாலையுடனும் சேர்ந்து ஒரு தீர்வைத் தேடுவோம்.

உங்களுக்கும் உங்கள் பிள்ளைக்கும் கலாச்சார மாற்றத்தின் மூலமாகப் பிரச்சினைகள் ஏற்பட்டு, அது பாடசாலையில் மற்றும் வளர்ப்பில் தென்படுமாயின், அதற்கான ஆலோசனைகளை வழங்க நாம் தயாராக உள்ளோம்.

பிள்ளைகள் மற்றும் இளையோர் தமது நாளாந்தக் கடமைகளின்போது எப்படி நடந்து கொள்வது என்பதுடன், அவர்கள் தமது குறிக்கோளை அடைவது குறித்தும் நாங்கள் வழிகாட்டுகின்றோம்.

நாங்கள் உங்களுடன் ஒன்றுசேர்ந்து உங்கள் பிள்ளையின் நிலை குறித்து கண்ணோக்குவதுடன் உங்களுடனும் பாடசாலையுடனும் சேர்ந்து தீர்வை உருவாக்குவோம்.

நாங்கள் பல்கலாச்சாரம் குறித்துப் பெற்ற அறிவைப் பயன்படுத்துவதுடன் மொழிபெயர்ப்பாளர்களுடன் சேர்ந்து செயற்படுவோம்.

பாடசாலை உளவளச் சேவையின் விளக்கங்கள் மற்றும் ஆலோசனைகளுக்கான செலவை மாநிலம் பொறுப்பேற்கும்.

## பாடசாலை ஆண்/பெண் உளவள நிபுணரிடம் வரும்போது என்ன நடைபெறும்

நீங்களும் உங்கள் பிள்ளையும் எம்மைச் சந்திக்கும் நிகழ்வு எமது அலுவலகத்தில் இடம்பெறும்.

பெற்றோர் மற்றும் பாடசாலை அத்துடன் பாடசாலை உளவளச் சேவை தமக்குள் தொடர்பைக் கொண்டிருப்பதுடன் பிள்ளை குறித்த தகவல்களைப் பரிமாறிக்கொள்வர்.

பிள்ளையின் திறமைகள் மற்றும் பலவீனங்களை அறிந்து கொள்வதற்காக நாங்கள் உங்கள் பிள்ளையுடன் பாடசாலை உளவளப் பாடங்களையும் சோதனைகளையும் செய்து கொள்வோம். இது பிள்ளை மகிழ்வாக இருக்கும் ஒரு சூழலிலேயே இடம்பெறும்.

நாங்கள் பிள்ளையுடன், உங்களுடன் மற்றும் பாடசாலையுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்வோம். உங்கள் பிள்ளைக்கு ஒரு சிறப்பான எதிர்காலம் அமைவதற்காக, ஒன்றுசேர்ந்து ஒரு தீர்வைத் தேடிக்கொள்வோம்.

## பாடசாலை- மற்றும் வளர்ப்பிற்கான ஆலோசனை நிலையம்

Schul-und Erziehungsberatung Graubünden
Quaderstrasse 17, 7001 Chur
081 257 27 42
annalise.hatz-bircher@avs.gr.ch

**www.avs.gr.ch** > பாடசாலை உளவள சேவை

உங்கள் பிள்ளையின் ஆசிரியர்கள் பொறுப்பு வகிக்கும் பாடசாலை- மற்றும் வளர்ப்பிற்கான ஆலோசனை நிலையம் குறித்து அறிந்திருப்பர். நீங்களும் சொந்தமாகப் பதிவு செய்து கொள்ள முடியும்.

*உங்களுக்குத் தெரியாமல் எவ்வித தகவல்களையும் வேறு நிலையங்களுக்கு வழங்குவதற்கு எமக்கு அனுமதியில்லை.*

Tamil

SCHULPSYCHOLOGISCHER DIENST GRAUBÜNDEN

# SCHUL- UND ERZIEHUNGSBERATUNG

GEMEINSAM LÖSUNGEN FINDEN